சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :05.02.2025
வா.சா.1 –கண்ணதாசன் S/o சொக்கலிங்கம்
O.S No.7/2023 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் இந்த வழக்கை 2 இன சொத்திற்காக தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு 1வது இன சொத்தினுடைய சர்வே நம்பர் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே நம்பர்.558/2B ஆகும். அதனுடைய விஸ்தீரணம் 2 ஏக்கர் 77 செண்டு ஆகும். 1வது இன சொத்தை பொறுத்து கிழக்கே - வாய்க்கால், மேற்கே - அழகிரி மகன் பாண்டியிடம் இருந்தது தற்போது கன்னையா மகன் அரவிந்தன் என்பவரிடம் இருக்கிறது. வழக்கு 2வது இன சொத்து சர்வே நம்பர்.558/2Bயில் 13 செண்டு ஆகும். வழக்கு சொத்து எங்களுடைய பூர்விக சொத்தாகும்.அது எங்களுக்கு வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் டிப்ளமோ படிப்பு படித்துள்ளேன். ஆங்கிலம் ஓரளவிற்கு தெரியும். சாட்சி தாமாக முன்வந்து வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியம் என்றும், பரமாயி, கருப்பணன் என்பவருக்கு விற்பனை செய்தது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தோம் என்று கூறுகிறார். வேறு பரிகாரம் கேட்டுள்ளோமா என்றால் கேட்கவில்லை. ஆதியில் வழக்கு சொத்தின் சர்வே நம்பர்.558/2ல் மொத்தம் 5 ஏக்கர் 71செண்டு என்றால் சரிதான். வழக்கு சொத்து 5 ஏக்கர் 71 செண்டு முழு விஸ்தீரணமும் ஆதியில் முருகாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பது எங்களுடைய கட்சி என்றால் சரிதான். முருகாண்டி என்பவருக்கு முத்துச்சாமி என்ற மகன் உண்டு என்றால் சரிதான். முத்துச்சாமி என்பவருடைய மனைவி தான் பரமாயி என்றால் சரிதான். முத்துச்சாமிக்கும் பரமாயிக்கும் பிறந்த மக்கள் தான் சொக்கலிங்கம் மற்றும் மீனாட்சி என்றால் சரிதான். மீனாட்சியை தான் நான் இந்த வழக்கில் 1ம்

பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். சொக்கலிங்கம் என்பவருடைய வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். ஆதியில் முருகாண்டிக்கு நிறைய சொத்துக்கள் இருந்தன என்றால் சரிதான். முருகாண்டி வா.சா.ஆ-1 உயிலை எழுதி வைத்ததாக எங்களுடைய கட்சி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயிலுடைய நகல் என்றால் சரிதான். அசல் தாக்கல் செய்யப்படவில்லை. உயிலில் A இன சொத்தானது சொக்கலிங்கத்திற்கும் B இன சொத்து மீனாட்சிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 உயிலானது 23.07.1957 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது ஆனால் எழுதப்பட்டுள்ளது 21.07.1957. வா.சா.ஆ.1 ஆவணத்தை நகல் எடுத்தது என்னுடைய தந்தை சொக்கலிங்கம் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 உயிலில் மொத்தம் 15 இன சொத்துக்கள் அ அட்டவணையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் அ அட்டவணையில் 14 இன சொத்தானது வழக்கு சொத்து சர்வே எண்.558/2ன் முழு விஸ்தீரணம் 5 ஏக்கர் 71 செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணம் உயில் எழுதப்பட்ட போது என் தந்தை சொக்கலிங்கத்திற்கு வயது 3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆக என் தந்தை சொக்கலிங்கம் உரிய வயதை 1972ம் ஆண்டே அடைந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயிலில் நிர்வகிப்பவராக கோட்டந்த்தம்பட்டியை சேர்ந்த கந்தசாமி மகன் வீரணன் என்பவரை முருகாண்டி நியமித்திருந்தார் என்றால் சரிதான். சொக்கலிங்கம் உரிய வயதை அடைந்தவுடன் வீரணன் சொத்தை சொக்கலிங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்றும், அதற்கு மேல் அவருக்கு உரிமை எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1984ம் ஆண்டு பிறந்தேன். எனக்கு 1993-94ம் வருடம் தான் ஓரளவிற்கு விபரம் தெரியவந்திருக்கும் என்றால் சரிதான். 1984ல் இருந்து 1989 வரை நடந்த

விபரங்கள் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. முருகாண்டி 1960ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 1960ல் அவர் காலமாகிவிட்டதால் வா.சா.ஆ.1 உயிலானது அவர் இறந்த பிறகு 1960ல் நடைமுறைக்கு வருகிறது என்றால் சரிதான். சாட்சியிடம் 16.09.1970ல் என்னுடைய பாட்டி பரமாயி, கருப்பணன் என்பவருக்கு எழுதி வைத்துள்ள கிரைய பத்திரம் காட்டப்பட்டது. சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று குறிப்பிடுகிறார். மேற்படி பத்திரமானது, பரமாயி தனக்காகவும்,தன்னுடைய இளவர் மகன் சொக்கலிங்கத்திற்காகவும் கட்டுப்படுத்தி கருப்பணன் என்பவருக்கு எழுதிகொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பரமாயி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமானது சர்வே எண்.558/2ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 71 செண்டில் கீழ்புறமுள்ள 3 ஏக்கரை கட்டுப்படுத்தியது என்றால் சரிதான். மேற்படி 5 ஏக்கர் 71 செண்டில் மேல்புறம் மீதமுள்ள 2 ஏக்கர் 71 செண்டை என் அப்பத்தா பரமாயி மற்றும் என் தந்தை சொக்கலிங்கமும் சேர்ந்து 05.09.1975ல் அழகிரி மகன் பாண்டிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள். என் தந்தை சொக்கலிங்கம் 1972ம் ஆண்டு உரிய வயதை அடைந்துவிட்டபடியால் அவர் தன்னுடைய தாயுடன் சேர்ந்து 1975ம் ஆண்டு பாண்டிக்கு மேல்புறமுள்ள 2 ஏக்கர் 71 செண்டை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பாண்டி பெயருக்கு கிரையம் ஏற்பட்ட பத்திரத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பாண்டியின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் நான்குமாலில் கிழக்கே கருப்பணனின் புஞ்சை நிலம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் சொக்கலிங்கம் உரிய வயதை 1972ல் அடைந்ததில் இருந்து 1975 வரை 3 ஆண்டுகளுக்குள்ளாக அவரது தாயார் பரமாயி எழுதிக்கொடுத்த 1970 தேதியிட்டகிரைய பத்திரத்தை ரத்து செய்ய

நடவடிக்கை எதுவும் எடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி கருப்பணன் என்பவரின் மகன் தான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி தவமணி என்றால் சரிதான். 1970ல் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தை பொறுத்து எனது தகப்பனார் 1972முதல் 1988 வரையிலான காலங்களில் அதை ரத்து செய்ய நடவடிக்கை ஏதேனும் எடுத்தாரா என்றால் இல்லை. என் தந்தை 2022ம் ஆண்டு காலமாகிவிட்டார். 1970ல் ஏற்பட்ட கருப்பணன் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையத்தை பொறுத்து என் தந்தை 1972முதல் அவர் இறக்கும் காலமான 2022 வரை சொக்கலிங்கம் அதை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் எடுத்தாரா என்றால் நீதிமன்றத்திற்கு வரவில்லை. வருவாய் துறையில் நடவடிக்கை எடுத்தார். வருவாய் துறையில் வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தை ரத்து செய்ய என் தந்தை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் பட்டா மாறுதல் செய்யக்கூடாது என்று தான் நடவடிக்கை எடுத்தார். ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. வழக்கு சொத்தை பொறுத்து 1988 வரையில் என் தகப்பனார் சொக்கலிங்கம் பெயரில் எந்த பட்டாவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து என் தந்தை பெயரில் பட்டா 1984 வாக்கில் தோராய பட்டா, அடங்கல் வழங்கப்பட்டது. வா.சா.ஆ.3. பட்டாபாஸ் புத்தகமானது என் தந்தை பெயரில் 1988ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து பட்டா ஏதேனும் 1988க்கு முன்பாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் தந்தையான கருப்பணன் வழக்கு சொத்தை தான் கிரையம் பெற்றதாக வட்டாட்சியர் மேலூரிடம் சொத்துக்கு பட்டா வழங்கும்படி மனு 1988க்கு பின்பு செய்திருந்தார் என்றால் சரிதான். என் தந்தைக்கு வழக்கு சொத்து சர்வே எண்ணில் தவறாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் அதை ரத்து செய்யவேண்டி 2ம் பிரதிவாதியின் தந்தையான கருப்பணன் வட்டாட்சியரிடம்

மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. நா்ங்களே எங்களது தரப்பில் வா.சா.ஆ.8 ஆவணமாக கருப்பணன் அவர்கள் சொக்கலிங்கம் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யவேண்டி RTR No.940/88-89 என்ற மனு தாக்கல் செய்து அதில் என் தந்தை சொக்கலிங்கம் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணை தான் வா.சா.ஆ.8 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் என் தந்தை சொக்கலிங்கத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்து கருப்பணன் பெயரில் வழங்கி 14.08.1989ம்ஆண்டு உத்தரவு பிறப்பித்ததை எனது தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக எனது தந்தை மேல்முறையீடு எதுவும் செய்தாரா என்றால் இல்லை அவர் ஊரிலே இல்லை, கிளம்பிவிட்டார். எந்த தேதியில், எந்த மாதத்தில், எந்த வருடத்தில் என் தந்தை ஊரைவிட்டு சென்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு வா.சா-ஆ.1 உயிலில் கண்டுள்ள 15 இலக்க சொத்துக்களில் என் தந்தைக்கு ஒதுக்கப்ட்ட வழக்கு சொத்தை தவிர மீதமுள்ள 14 இலக்க சொத்துக்களை எனது பாட்டி பரமாயி யார் யாருக்கு எவ்வளவு விற்பனை செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பரமாயி விற்பனை செய்த 14 இலக்க சொத்துக்களை பொறுத்து வழக்கு ஏதேனும் நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இனிமேல் தான் தாக்கல் செய்ய வேண்டும். 2ம் பிரதிவாதியின் தந்தையான கருப்பணன் 1998ம் ஆண்டு காலமானார் என்றால் தெரியவில்லை. 1988ல் இருந்து 1998 வரை கருப்பணன் வழக்கு சொத்தில் என்ன விவசாயம் செய்து வந்தார் என்றால் அது தரிசாக தான் இருந்தது. கருப்பணன் சொத்தை அனுபவித்துவரும் போது 1988ல் இருந்து 1998 வரையிலான காலகட்டத்தில் அவரது அனுபவத்தை தடை செய்தோமா என்றால் தடை செய்தோம். அதை ஊர்க்காரர் சொல்லி தான்

எனக்கு தெரியும், எனக்கு நேரடியாக தெரியாது.  கருப்பணனின் மகன் பெயரில் உயில் 1988ல் எழுதி வைத்திருந்தபடியால் அவருடைய மகன் 2ம் பிரதிவாதி தான் வழக்கு சொத்தை கருப்பணன் இறப்புக்கு பிறகு ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் தரிசாக தான் இருந்தது. 1998 ல் கருப்பணன் இறப்புக்கு பிறகு 2வது பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு வழக்கு சொத்தைஅவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை வழக்கு சொத்து அனுபவித்தில் இருந்து நான் ஏதேனும் இடையூறு செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அவருக்கு நான் விவசாயத்திற்கு உதவி செய்துள்ளேன் அப்போது எனக்கு விபரம் தெரியாது. சுமார் 5-6 வருடங்களுக்கு முன்னர் வழக்கு சொத்திற்கு நான் தான் பைப்லைன் இழுத்து கொடுத்தேன். கருப்பணன் எழுதி வைத்த உயிலை நான் படித்து பார்க்கவில்லை. நான் இந்த வழக்கில் வழக்கு சொத்தை பிரதிவாதிகள் யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்று இடைக்கால மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி இடைகால மனு இருதரப்பிலும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு முழுவிசாரணைக்கு பிறகு இருதரப்பு ஆவணங்களும் பரிசீலனை செய்து மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு சொத்தானது வாதிகளான எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.05 19:06:21 +0530

Sub Judge

Melur